திரு. கே. டி. கே. தங்கமணி : கரை வேஷ்டியும், கரைப் புடவையும் கைத்தறிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று இங்கே நாம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். மத்திய அரசு சட்டத்திலும் இடம் இருக்கிறதே? அதைப் புறக்கணிக்கக் கூடிய முறையில் மில்கள் சாதாரணமான துணிகளைப் போட்டு அதைப் புடவையாக ஆக்குகிறார்கள். அதே மாதிரி கரை இல்லாமல் இருந்தாலும் கூட அதை வேஷ்டியாக ஆக்குகிறார்கள். அதைத் தடை செய்ய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திலே அப்படிச் செய்வதற்கு வழி வகை வைத்துவிட்டு தடுப்பது எப்படி என்பதை ஆராயச் சொல்வது வருந்தத்தக்கது என்று கருதுகிறேன். நான் இங்கே விளக்கமாகச் சொன்னேன். வேஷ்டி என்று போட்டிருந்தால் பிரச்சினை இருக்காது. வேஷ்டி என்று போட்டு கலர்டு பார்டர்ஸ் என்று போட்டு அது $\frac{1}{4}$ இன்ச் அகலம் என்றும் போட்டிருப்பதால்தான் தொல்லைகள் வருகின்றன. அது ஒன்று. இன்னொன்று மாநில அரசுதான் அதை அமல் நடத்த வேண்டும். ஒரு மாநிலத்தில் உற்பத்தி செய்து இன்னொரு மாநிலத்தில் விற்றால் அதைத் தடுக்க முடியாது. இப்படிப்பட்ட ஓட்டைகள் அந்த உத்தரவில் இருக்கின்றன. நம்முடைய மாநில அரசின் பரிந்துரை வேஷ்டி என்றால் வேஷ்டி சேலை என்றால் சேலை என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் கைத்தறிக்கு மாத்திரம் என்று சொல்லியிருக்கிறோம். 4 விசைத் தறி என்றால் எக்ஸெம்ஷன் என்ற நிலை கூட கூடாது. நம்முடைய கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் இந்தப் பிரச்சினை இருக்காது. நாம் இதற்காக ஒரு சட்டம் இயற்றுவதற்காக இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை

*502 வினா—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலூரில் அமைந்திருக்கும் மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நூற்பாலையில் தற்போது நிறுவப்பட்டிருக்கும் 12,420 நூற்கும் கதிர்களை 25,000க்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. த. சோலையா : மேலூர் பகுதியிலே வேலையில்லா திண்டாட்டத்தினால் பல பேர் கஷ்டப்படுகிறார்கள். இந்த மில்லை அதிகமாக வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவுக்கு விஸ்தரிப்பதற்கான திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

1974 மார்ச் 19]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருக்கிறது என்றுதான் இப்பொழுது சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மேலூரில் இருக்கக்கூடிய கூட்டுறவு நூற்பு ஆலை மற்ற ஆலைகள் மாதிரி லாபத்தில் ஓடுகிறது. ஒரு காலத்தில் 12,000 ஊசிகளைக் கொண்டிருந்த யூனிட் இப்பொழுது கிட்டத்தட்ட 25,000 ஊசிகளைக் கொண்டிருக்கிறதே ? இங்கே 25,000 ஊசிகளைக் கொண்டு வருவதற்கு ஏற்கெனவே ஏற்பாடு இருந்தது. இந்த ஆண்டு முடிவிற்குள் அம்மாதிரி செய்வதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு ஆலைகள் அனைத்திலும் 25,000 போடவேண்டும் என்ற ஒரு முடிவை அரசு எடுத்திருக்கிறது. நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாகச் செய்ய வேண்டும். வங்கிகளி லிருந்து பெறுவதற்கு முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

புதிய சர்க்கரை ஆலைகள்.

*503 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆர்க்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) குடியாத்தம் வட்டத்தில் அம்முண்டி கிராமத்தில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், வாணியம்பாடி வட்டத்தில் கேதண்டம்பட்டி கிராமத்தில் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையும் நிறுவ ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

திரு. கே. எ. வகாப் : ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஆலைகள் இன்னும் துவங்கக்கூடிய நிலையில் இல்லை. மேலும் அங்கே வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசியில்—இப்பொழுது பட்டாளத்திலுள்ள சர்க்கரை ஆலைப் பகுதியில் அதிகமாக கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது—திட்டக் காலத்தில் ஏற்பட இருக்கிற சர்க்கரை ஆலை வந்தவாசி செய்யாறு பகுதியில் ஏற்படுவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதியதாக 8 கூட்டுறவு ஆலைகள் பற்றி முடிவு எடுக்கும்பொழுது இதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை : தொடங்கப்பட இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஒன்று திருத்தணி வட்டத்தில் துவங்கப்படுவதற்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அது ஏற்கப்படுகிறதா இல்லையா என்பதை அரசு அறிவிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எல்லாக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப் படும்.